அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.241/2015

தேதி. 01.10.2015

# மத்திய அரசின் முடிவு வேதனை அளிக்கிறது
# இலங்கை விசாரணையால்
# நியாயம் கிடைக்குமா?
# உண்மை வெளிவருமா?
## ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்தேறிய இறுதிக்கட்ட போர் முற்றிலும் இனப்படுகொலை என்பதும், மனித உரிமை மீறல்கள் என்பதும், இலங்கை அரசு புரிந்தது போர்க்குற்றம் தான் என்பதும் ஐ நா சபையில் மனித உரிமை கவுன்சில் , சமர்ப்பித்த அறிக்கை வெட்டவெளிச்சமாக்கி இருக்கும் உண்மை.

இதைத் தொடர்ந்து, பாதிப்பிற்குள்ளான ஈழத்தமிழர்களுக்கு உரிய நியாயமும், சிங்களவர்களுக்கு இணையான உரிமையும் கிடைக்க வேண்டுமானால் மேற் சொன்ன குற்றங்கள் முறையாக விசரிக்கப்பட்டு, உண்மைகள் வெளிவந்தால் மட்டுமே சாத்தியம் என்ற அடிப்படையில், சர்வதேச விசாரணை தேவை என்று அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறது.

இதற்கு முன்பு, ஐநா மனித உரிமை கவுன்சிலில் சர்வதேச விசாரணைக்கு ஆதரவு அளித்ததுடன், பலமுறை இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை கொண்டுவந்த அமெரிக்கா தற்போது இலங்கைக்கு ஆதரவான தீர்மானத்தை கொண்டுவந்திருப்பது, மனித உரிமை மீறல்களையும், போர்க்குற்றங்களையும் நியாயப்படுத்தும் முயற்சி என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஒரு காலத்தில் இலங்கைக்கு எதிரான கண்ணோட்டத்தை கொண்டிருந்தது. தற்சமயம் ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருப்பது அமெரிக்காவின் இரட்டைவேட நிலையை நன்கு பறைசாற்றுகிறது. ஆனால், இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்கா கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பது என்பது அநியாயத்தின் உச்சகட்டச் செயல்.

இலங்கையில் நடந்தேறிய அநீதிகளாகட்டும், தமிழக மீனவர்கள் பிரச்னையாகட்டும், மத்தியில் ஆட்சிமாறினாலும், மத்திய அரசின் நிலைபாடுகளில் மாற்றமே இல்லை. உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து மௌனம் காத்து வருவதும், தற்சமயம் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்திருப்பதும் தமிழர்களுக்கு வேதனை ஏற்படுத்தும் செயலாகும். தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள மறுக்கும் மத்திய அரசின் நிலைப்பாடு கண்டிக்கத்தக்கது.

குற்றம் புரிகிற ஒரு அரசு தனக்குத் தானே உள்நாட்டிலேயே விசாரணை வைத்துக் கொண்டால் விசாரணை நியாயமாக நடக்குமா? உண்மைகள் வெளி வருமா? ராஜபக்சேவை எதிர்த்து வென்று அதிபராகி இருக்கும் சிறிசேன சர்வதேச விசாரணைக்கு சம்மதிப்பார் என்று எதிர் பார்த்ததிலும் ஏமாற்றம்தான். இலங்கையில் யார் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்தாலும், அவர்கள் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தான் எடுப்பார்கள் என்ற வரலாற்றுத் தொடரில் எந்தவித மாற்றமும் இல்லை.

இலங்கையில் போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை தேவை என்ற ஐநா மனித உரிமைக் கவுன்சிலின் அறிக்கையை அமெரிக்கா திட்டமிட்டு முறியடித்திருப்பது ஒரு பலம் வாய்ந்த உலகநாடுகளின் அமைப்பின் வலிமையை கேள்விக்குரியாக்கிவிட்டது. ஐநா மனித உரிமைக் கவுன்சில் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதைப் போல், இதுபோன்ற மனித உரிமை மீறல் குற்றங்கள் எந்த நாட்டிலும் அரங்கேறிவிடக் கூடாது என்ற அடிப்படையில் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்பட்டது. ஆனால், தற்போது நடந்திருப்பது மனித உரிமை என்ற அடிப்படையின் குரல்வளையை நெரிக்கும் செயல். இதற்கு இந்தியாவும் துணை போயிருப்பது கண்டிக்கத்தக்கது.

நன்றி , வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.